மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது அந்த ஆஸ்பத்திரியில் மட்டுமல்ல. அது எல்லா மருத்துவமனைகளிலும் உள்ள நிலைமையாகும். ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் தேவைப்படுகிற மருந்துகளை அவர்கள் பெறுகிற முறைப்படி அந்தந்த இடங்களிலிருந்து பெறவேண்டியிருக்கிறது. சில மருந்துகள் மூன்று மாத காலத்தில் அல்லது ஆறு மாத காலத்தில் முடிவடைகிறது. அதே மருந்துகளை திரும்பப் பெறவேண்டியிருக்கிறது. சில மருந்துகள் எப்போதாவது தேவைப்படுகிற மருந்துகள். எப்போதாவது தேவைப்படுகிற மருந்துகளை ஏராளமாக வாங்கி வைத்துக்கொள்வது என்பது பொது மக்களின் வரிப் பணத்தை வீணாக்குவதாகும். ஆகவே எப்போது தேவைப்படுகிறதோ அப்போது அவற்றை உடனடியாக வாங்கிக் கொள்கிற முறைதான் இன்று இருக்கிறது. அதற்குமேல் பொருளாதார வளம், எல்லாவற்றையும் எப் போதும் எங்கும் எவ்வளவும் வைப்பதற்கான வளம் அரசுக்கு இல்லை.

திரு. எம். தேவராசன் : குன்னூர் தலைமை மருத்துவமனையில் பல ஆண்டுகளாக எக்ஸ்ரே கருவி இல்லாத நிலையில் அந்த மருத்துவ மனையில் உடனடியாக ஒரு எக்ஸ்ரே கருவி அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி தனிப்பட்ட கேள்வியாக இருந்தாலும், அங்கே எக்ஸ்ரே கருவி இருக்கிறது. அது நீண்ட நாட்களாக பழுதுபட்டிருக்கிறது.

* 35. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தலைமை மருத்துவ மனையில் 1968 ஜூன் மாதத்தில் " Sagotin " " equipie " என்ற மருந்துகள் இல்லாமல் இருந்ததற்கான காரணங்கள் யாவை ?

(இ) இக்குறையைப் போக்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மருத்துவமனை வார்டுகளிலிருந்து " சகோடின் " " எக்குப்பி " போன்ற மருந்துகள் கனிசமான அளவு தேவைப் படவில்லையாதலால், இந்த மருந்துகளை அதிக அளவில் இருப்பு வைத்துக் கொள்ளவில்லை. அம்மருந்துகள் உயிர் காப்பு மருந்துகளாகவும் கருதப்பட வில்லை. வினாவில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு முன்னரே இம்மருந்துகள் வாங்கப்பட்டு இருப்பில் வைக்கப் பட்டன. ஆனால் இருப்பில் உள்ள மருந்துகள் தீர்ந்த பின்னர், அவை மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக மீண்டும் வாங்கப்படவில்லை.

(இ) பின்னர், வார்டுகளிலிருந்து இம்மருந்துகளுக்கான தேவை ஏற்பட்ட போது அவை வாங்கப்பட்டு வார்டுகளுக்குக் கொடுக்கப்பட்டன.

திரு. சு. துரைசாமி : மருத்துவ மனைகளில் எவ்வளவு மருந்துகள் தேவை என்று முன்கூட்டியே ஒரு வருடத்திற்கு ஒரு முறை சொல்கிறார்கள். அப்படி தேவைப்படுகிற மருந்துகளை முன்கூட்டியே எவ்வளவு தேவை என்று பார்த்து அம்மருந்துகளை முன்கூட்டியே வாங்கி வைத்துக்கொள்ளக்கூடிய முயற்சியை மேற்கொண்டால் இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தவிர்க்க முடியும். ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படுகிற மருந்துகளைக் குறித்து தொடர்ந்து ஆராயப்படவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. மருத்துவ மனைகளில் ஆகிற செலவில் முக்கால் பங்குச் செலவு மருந்துகளுக்காக ஆகிறது. எல்லோருக்கும் தேவைப்படுகிற மருந்துகள் 20 விழுக்காடு செலவிற்கு வருகிறது. சிலருக்குத் தேவைப்படுகிற மருந்துகள் 5 விழுக்காடு என்ற நிலையில் இருக்கிறது. மிகச் சிலருக்குத் தேவைப்படுகிற மருந்துகள் இருக்கின்றன. மிகமிகச் சிலருக்குத் தேவைப்படும் மருந்துகளுக்கு அவற்றை வாங்கி வைத்துக்கொள்ள அதிகச் செலவு ஆகிறது. அந்தச் சில மருந்துகள், அதிகத் தொகையை விழுங்கி விடுகிறது. ஆகவே, அப்போதைக்கப்போது, தேவைப்படுகிற நேரத்தில், இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தேவைக்கேற்ப, நிலைமைக்கேற்பத்தான் வாங்க முடியுமே தவிர அவை எல்லாக் காலத்திலும் வாங்கி வைக்க இயலாதவை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருப்பூர் அரிசன மாணவ விடுதிகளுக்கு வானொலிப்பெட்டி

*** 36. வின.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள அரசினர் மாணவர், மாணவியர் அரிசன விடுதிக்கு வானொலிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் அரசினர் மாணவர், மாணவியர் விடுதிகளில் வானொலிப் பெட்டிகள் கொடுப்பதன் மூலம் வானொலி மூலம் கற்பிக்கப்படுகிற பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். அதோடு அவர்களது பொது அறிவையும் பெருக்கிக் கொள்ள அது உதவியாக இருக்கும். ஆகவே அரசினர் மாணவர், மாணவியர் விடுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வாங்கி வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாணவர்கள் விடுதிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்குவது என்பது பொதுக் கொள்கை. ஒரு கொள்கை என்றால் எல்லாவிடங்களிலும் வைக்க ஆலோசிக்கவேண்டும். வானொலிப் பெட்டிகள் வைத்தால் அவர்கள் இசையைக் கேட்டுக்கொண்டு நேரத்தினைக் கழித்து விடுவார்கள். பொதுமக்களின் வசதிக்காக வைப்பது வேறு. ஆனால் விடுதிகளில் வைப்பது அவ்வளவு சரியான கருத்து அல்ல.

செங்கற்பட்டு மாவட்டத்தில் புது வருவாய்க் கோட்டம்

*** 37. வின.—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில், பொன்னேரி வட்டம், கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பென்னலூர்பேட்டைத் துணை வட்டம் ஆகியவற்றை இணைத்து தனிக் கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.